## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, சங்ககிரி
## சேலம் மாவட்டம்.

**முன்னிலை – திரு. D. சிவக்குமார், B.Sc., M.I.B., L.L.B., P.G.D.C.A.,**

2026 –ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11–ம் நாள் செவ்வாய்கிழமை
ஸ்ரீபராபவ ஆண்டு ஆடி மாதம் 26– ம் நாள் செவ்வாய்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் –34/2025**
**CNR No. TNSA09–000688–2025**

தமிழ்நாடு அரசுக்காக,
(State of Tamil Nadu, Rep. by,)
காவல் ஆய்வாளர்,
மகுடஞ்சாவடி காவல் நிலையம்,
குற்ற எண். 208/2023 .... குற்றமுறையீட்டாளர்

**/எதிர்/**

திரு. ஜெயபிரகாஷ் (29/2023),
த/பெ. தர்மலிங்கம்,
283 பூதப்பாடி,
சந்தை கேட்,
அந்தியூர் தாலுக்கா,
ஈரோடு மாவட்டம். .... எதிரி

SIVAKUMAR D

Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.11 16:26:10 +0530

| S. No | Name of the P.S and Cr.No of the Offence | Description of the Accused | | | | | Date of | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Name | Father's name | Occupation | Residence | Age | Occurrence | Complaint | Apprehension | Release on bail | Commitment | Commencement of Trail | closure of Trial | Service of Copy Judgment or finding on accused | Sentence or order | Explanation of Delay |
| **1** | **2** | **3** | **4** | **5** | **6** | **7** | **8** | **9** | **10** | **11** | **12** | **13** | **14** | **15** | **16** | **17** |
| 1 | Magudanchavadi P.S Cr.No. 208/2023 | Jayaprakash | Tharmalingam | Driver | 283 Boothapadi, Santhai Get, Anthiyur Taluk, Erode Dt. | 29/2023 | 25.06.2023 | 25.06.2023 | 26.07.2023 | 26.07.2023 (Station bail) | Nil | 13.11.2025 | 11.08.2026 | N.A | 11.08.2026 | N.A |

| | | |
|---|---|---|
| **I.** | Period of Remand of Accused | Nil (Station bail) |
| **II.** | Date of filing of Final Report in Court | 13.05.2025 |
| **III.** | Date of questioning of accused under section 230 B.N.S.S | 30.09.2025 |
| **IV.** | Filing of Miscellaneous petitions and their result | 1. C.M.P.No.1159/2025 – U/s.72(2)of B.N.S.S. filed and allowed on 30.09.2025<br>2. C.M.P.No.1160/2025 - Surrender petition – filed and allowed on 30.09.2025.<br>3.Petition U/s. 311 Cr.P.C/ 348 of B.N.S.S. filed and allowed vide C.M.P.No.05/2026, dated 22.06.2026. |
| **V.** | Date of examination in chief and cross-examination of witnesses | (see table below) |

| Witness | Chief | Cross |
|---|---|---|
| PW1 | 10.02.2026 | 10.02.2026 |
| PW2 | 10.02.2026 | 10.02.2026 |
| PW3 | 17.03.2026 | 17.03.2026 |
| PW4 | 17.03.2026 | 17.03.2026 |
| PW5 | 22.06.2026 | 22.06.2026 |



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.11 16:26:15 +0530

| | | |
|---|---|---|
| VI. | Date of examination of accused under section 351(1)(b) of B.N.S.S. | 30.06.2026 |
| VII | Details of abscondence of accused and his appearance / production | Nil |
| VIII. | Grant of stay by superior Court and the result thereof | Nil |
| IX. | Final Order | Accused is found not guilty and acquitted under Section **271(1) of B.N.S.S** for the offences Section 279, 338, 304(A) I.P.C. and he be set at liberty. |

**<u>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SANKARI</u>**

**JUDGMENT IN C.C. NO. 34 OF 2025 ON THE FILE OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SANKARI.**
**PRESENT: Thiru. D. Sivakumar, B.Sc., M.I.B., L.L.B., P.G.D.C.A.,**
**Judicial Magistrate No.II, Sankari**
**(Thursday, Dated: 11th day of August 2026)**

| | |
|---|---|
| Complainant | Inspector of Police, Magudanchavadi. |
| Accused | Mr.Jayaprakash (29/2023) S/o. Tharmalingam. |
| Offences | Under Section 279, 338, 304(A) of I.P.C. |
| Finding | Accused is found not guilty for the offences under Section 279, 338, 304(A) I.P.C. |
| Sentence | In the result, Accused is found not guilty and acquitted under Section **271(1) of B.N.S.S** for the offences Section 279, 338, 304(A) I.P.C. and he be set at liberty. |

இவ்வழக்கானது கடந்த 13.05.2025, இந்நீதிமன்றத்தில் CC.No.34/2025–ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இறுதியாக 11.08.2026–ஆம் தேதி விசாரணைக்கு வந்த போது, அரசுதரப்பில் கற்றறிந்த அரசு உதவி வழக்கறிஞர் அவர்களும், எதிரி தரப்பில்



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.11 16:26:20 +0530

கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.M. ஜெயபிரதீப்,** அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்களை கேட்டறிந்தும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இந்த வழக்கில் இன்று வழங்குகின்ற

**<u>தீர்ப்புரை</u>**

**1.** கடந்த 25.06.2023–ம் தேதி பிற்பகல் 2.40 மணிக்கு வழக்கில் இறந்து போன ஸ்ரீதரன் என்பவர் TN 30 AE 4691 என்ற எண்ணுள்ள Bajaj Platina மோட்டார் சைக்கிளில் அ.சா.1– ராகுல் என்பவரை பின்னால் உட்கார வைத்துக்கொண்டும் அவருக்கு பின்னால் அ.சா.2– சீனிவாசன் உட்கார்ந்து கொண்டும் ஸ்ரீதரன் ஓட்டிக்கொண்டும் மூன்று பேரும் மகுடஞ்சாவடி காவல் நிலைய சரகம் இளம்பிள்ளை to காகாபாளையம் ரோட்டில், இளம்பிள்ளை M.S. சில்க்ஸ் துணிக்கடை அருகில் காகாபாளையம் நோக்கி ரோட்டின் இடது ஓரமாக சென்று கொண்டிந்தனர்.

**1. (a).** அப்போது, எதிரி ஜெயபிரகாஷ் என்பவர் TN 90 E 5305 என்ற எண்ணுள்ள TVS XL மோட்டார் சைக்கிளை எதிரே காகாபாளையம் பக்கமிருந்து இளம்பிள்ளை நோக்கி அதிகவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி சென்று ஸ்ரீதரன் மோட்டார் சைக்கிளின் மீது மோதியதில் ஸ்ரீதரன் ஓட்டிச்சென்ற மோட்டார் சைக்கிள் ரோட்டின் வலதுபுறம் திரும்பி அதே திசையில் எதிரி மோட்டார்



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.11 16:26:25 +0530

சைக்கிளுக்கு பின்னால் அ.சா.3 தங்கவேலு என்பவர் அவருடைய மனைவி புஷ்பா என்பவரை பின்னால் உட்காரவைத்து கொண்டு ஓட்டி வந்த TN 90 A 5079 என்ற Hero Splendor Pro மோட்டார் சைக்கிளின் மீது மோதியும் விபத்தை ஏற்படுத்தியது சட்டப்பிரிவு 279 இ.த.ச.வின் படியும்,

**1. (b).** மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக எதிரி ஜெயபிரகாஷ் ஏற்படுத்திய விபத்தினால் ராகுலுக்கு வலது கண் புருவத்திலும் முன் நெற்றியின் உள்பகுதியிலும் கொடுங்காயங்களை ஏற்படுத்தியது சட்டப்பிரிவு 338 இ.த.ச.–ன் படியும், மேலும், எதிரி ஜெயபிரகாஷ் ஏற்படுத்திய விபத்தினால் ஸ்ரீதரனுக்கு தலையில் பலத்த அடியும், இடது கை, இடது முன்கையில் சிராய்ப்பு காயமும், ஏற்பட்டு சீரகாபாடி விம்ஸ் மருத்துவமனையில் சிகிச்சைக்கை சேர்த்து அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று அங்கு சிகிச்சையிலிருந்த ஸ்ரீதரன் 29.06.2023–ம் தேதி இரவு 10.40 மணிக்கு சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். எனவே, எதிரியானவர் விபத்தினால் ஸ்ரீதரனுக்கு மரணத்தை ஏற்படுத்தியது சட்டப்பிரிவு 304(A) இ.த.ச.வின் படியும் குற்றமாகும். எனவே எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் 279, 338, 304(A) இ.த.ச.–வின் கீழ், தண்டிக்கத்தக்க குற்றங்கள் புரிந்ததாக மகுடஞ்சாவடி காவல் நிலைய காவல் ஆய்வாளர் இந்நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.11 16:26:30 +0530

**2.** மேற்படி குற்ற அறிக்கையை இந்நீதிமன்றம் நன்கு பரிசீலித்து எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 279, 338, 304(A)–ன் கீழ் புலன் கொள்ளக்கூடிய முகாந்திரம் இருந்ததால் இவ்வழக்கு கோப்புக்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் பிரிவு 230 of B.N.S.S–வின் கீழ் இவ்வழக்கின் ஆவணங்களின் நகல்கள் இலவசமாக வழங்கி எதிரியிடம் குற்றங்கள் பற்றி விளக்கி கூறி வினவிய போது எதிரி குற்றங்களை மறுத்துரைத்தார். எதிரி மீதான முதற்நோக்கிலான குற்றங்களுக்கு போதுமான முகாந்திரம் இருந்த காரணத்தினால் எதிரியின் மீது இ.த.ச பிரிவுகள் 279, 338 304(A)–ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து, அவர்களிடம் விளக்கி கூறி வினவியபோது, எதிரி குற்றச்சாட்டுகளை மறுத்து வழக்கு விசாரிக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். எனவே, அரசுத்தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

**3.** அரசுதரப்பில், இவ்வழக்கில், பட்டியல் சாட்சிகள் 5 முதல் 20 வரையிலானவர்களை விசாரிக்க வேண்டியதில்லை என்று கற்றறிந்த அரசு உதவி வழக்கறிஞர் அவர்கள் மேற்குறிப்பு செய்துள்ளார். இவ்வழக்கினை புலன் விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்த **பட்டியல் சாட்சி 18 – திரு. ரகு, காவல் உதவி ஆய்வாளர், பட்டியல் சாட்சி 19. திரு. வெங்கடேஷ்பிரபு, காவல் ஆய்வாளர் மற்றும் பட்டியல் சாட்சி 20 திரு. தங்கவேல், காவல் ஆய்வாளர்**



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.11 16:26:36 +0530

அவர்களுக்கு பதிலாக **திரு. சண்முககுமார், சிறப்பு காவல் உதவி ஆய்வாளர்,** அவர்களை அரசுத்தரப்பு பட்டியலில் கூடுதல் சாட்சியாக சேர்ப்பதற்காக பிரிவு 348 of B.N.S.S–ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனு இந்நீதிமன்றத்தால் ஒப்புதல் பெற்ற பின்னர், அரசுதரப்பு சாட்சி 5–ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அத்துடன் அரசுத்தரப்பு சாட்சி விசாரணையானது முடிக்கப்பட்டது.

4. அரசுத்தரப்பில் அ.சா.01 முதல் அ.சா.05 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.01 முதல் அ.சா.ஆ.12 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

5. அரசுத்தரப்பு சாட்சியங்கள் விசாரித்து முடித்த பின்பு, அதனை படித்து காண்பித்து பிரிவு 351(1)(b) B.N.S.S–ன் படி கேள்விகள் கேட்டபோது, எதிரி அதனை பொய்சாட்சியம் என்றும், பொய்வழக்கு என்றும், தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் கூறினார்.

6. எதிரி தரப்பில் சாட்சிகளோ, சான்றாவணங்களோ விசாரணை செய்து குறியீடு செய்யப்படவில்லை.

7. அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.01 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள், அ.சா.ஆ.01 முதல் அ.சா.ஆ.12 வரையிலான சான்றாவணங்கள் ஆகியவற்றின் மூலமாக, அரசுத்தரப்பில் எதிரி மீது



SIVAKUMAR D

Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.11 16:26:41 +0530

வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டு உள்ளதாகவும், எனவே, எதிரிக்கு தக்க தண்டனை வழங்க வேண்டும் என்று அரசுத்தரப்பில் வாதிடப்பட்டது.

Chart for Witnesses Examined:

| Prosecution Witness No. | Name of Witness | Description |
|---|---|---|
| அ.சா.1 | திரு.ராகுல் | புகார்தாராவார். இவர் இவ்வழக்கு குற்ற சம்பவத்தைப் பற்றி கூறும் சாட்சி. |
| அ.சா.2 | திரு. சீனிவாசன் | குற்ற சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி. இவர் இவ்வழக்கு குற்ற சம்பவத்தைப் பற்றி கூறும் சாட்சி. |
| அ.சா.3 | திரு. தங்கவேல் | குற்ற சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி. |
| அ.சா.4 | திருமதி. புஷ்பா | குற்ற சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி. |
| அ.சா.5 | திரு. சண்முககுமார், சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் | இவ்வழக்கின் முதற்கட்ட புலன் விசாரணை அதிகாரிகளான திரு.ரகு, திரு. வெங்கடேஷ்பிரபு, மற்றும் இறுதி கட்ட புலன் விசாரணை அதிகாரியான திரு.தங்கவேல் ஆகியோர்கள் புலன் விசாரணை செய்த விபரத்தைப் பற்றி கூறும் சாட்சி. |

SIVAKUMAR D

Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.11 16:26:46 +0530

Chart for Exhibited Documents:

| Exhibit No. | Description of the Exhibit | Proved by / Attested by |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் வாக்குமூலம் | அ.சா.5 |
| அ.சா.ஆ.2 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.5 |
| அ.சா.ஆ.3 | பார்வை மகஜர் | அ.சா.5 |
| அ.சா.ஆ.4 | மாதிரி வரைபடம் | அ.சா.5 |
| அ.சா.ஆ.5 | பிரேத விசாரணை அறிக்கை | அ.சா.5 |
| அ.சா.ஆ.6 | பிரேத பரிசோதனை சான்று | அ.சா.5 |
| அ.சா.ஆ.7 | காயச்சான்று | அ.சா.5 |
| அ.சா.ஆ.8 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை | அ.சா.5 |
| அ.சா.ஆ.9 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை | அ.சா.5 |
| அ.சா.ஆ.10 | மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வறிக்கை (TN 90 E 5305) | அ.சா.5 |
| அ.சா.ஆ.11 | மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வறிக்கை (TN 30 AE 4691) | அ.சா.5 |
| அ.சா.ஆ.12 | மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வறிக்கை (TN 90 A 5079) | அ.சா.5 |

**8. கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், இவ்வழக்கின் எதிரிதான் சம்பவ சமயத்தில், TN 90 E 5305 என்ற TVS XL மோட்டார் சைக்கிளை காகாபாளையம் – இளம்பிள்ளை ரோட்டில் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி சென்று, வழக்கில் இறந்துபோன ஸ்ரீதரன் என்பவர் ஓட்டிச்சென்ற TN 30 AE 4691 என்ற**



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.11 16:26:59 +0530

**Bajaj Platina மீது மோதி விபத்தை ஏற்படுத்தி, அதனால் ஸ்ரீதரனுக்கு பலத்த காயம் ஏற்பட்டு சிகிச்சை பலனின்றி உயிர் இழந்தார் என்ற விவரத்தையும், மேலும், அச்சமயத்தில் TN 90 A 5079 என்ற Hero Splendor Pro மோட்டார் சைக்கிளின் மீது ஸ்ரீதரன் ஓட்டிச்சென்ன மோட்டார் சைக்கிள் மோதி விபத்தை ஏற்படுத்திய விவரத்தையும், மேலும், மேற்சொன்ன சம்பவத்தில் அ.சா.1—க்கு கொடுங்காயம் ஏற்பட்டது என்று அரசுதரப்பு சாட்சிகள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கும் வகையில் சாட்சியம் அளிக்கவில்லை என்று வாதிட்டார்.**

9. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் அரசுதரப்பில், எதிரி மீது வனையப்பட்டுள்ள இ.த.ச பிரிவுகள் 279, 338, 304(A), கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதேயாகும்.

**அரசுத்தரப்பு சாட்சிகள், தங்களின் முதல் விசாரணையின் போது, கீழ்கண்டவாறு சாட்சியம் அளித்துள்ளனர்:**

**10. (a). அ.சா.1. திரு. ராகுல்,** தனது முதல் விசாரணையில், "கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பாக இளம்பிள்ளை பஸ் ஸ்டாண்ட் அருகே நானும், எனது இரு நண்பர்களான ஸ்ரீதரன் மற்றும் சீனிவாசன் ஆகிய மூவரும் இருசக்கர வாகனத்தில் செல்ல அந்த வாகனத்தை எனது நண்பர் ஸ்ரீதரன் இயக்க, ஒரு TVS எக்ஸல் வாகனம் நாங்கள் சென்ற



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.11 16:27:05 +0530

இடது பக்கமாகவே, எதிரே வந்தது. பின்னர், மேற்சொன்ன TVS எக்ஸல் வாகனம் வலது பக்கமாக திரும்பியது. எனவே, எனது நண்பரான ஸ்ரீதரன் அந்த TVS எக்ஸல் வாகனத்தின் மேல் இடிக்க கூடாது என்று கருதி நாங்கள் சென்ற இருசக்கர வாகனத்தை வலது பக்கமாக வலைக்கவே விபத்து நடந்தது.

2. மேற்சொன்ன TVS எக்ஸல் வாகனத்தை யார் ஓட்டினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் விபத்தில் மயக்க நிலையில் இருந்தேன். அதற்கு பின்னர் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. நான் கண்விழித்து பார்த்தபோது மருத்துவமனையில் இருந்தேன். விபத்து சம்பவத்தில் ஸ்ரீதரன் சிகிச்சை பலனில்லாமல் உயிர் இழந்தார். எனக்கு காயம் ஏற்பட்டது. நான் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று கொண்டிருந்த நிலையில், மகுடஞ்சாவடி காவல் நிலைய அதிகாரி என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்றார். போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்." என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**10. (b). அ.சா.2. திரு. சீனிவாசன்**, தனது முதல் விசாரணையில், "கடந்த 25.06.2023 அன்று இளம்பிள்ளை பஸ் ஸ்டாண்ட் அருகே நானும், எனது இரு நண்பர்களான ஸ்ரீதரன் மற்றும் ராகுல் ஆகிய மூவரும் இருசக்கர வாகனத்தில் செல்ல அந்த வாகனத்தை எனது நண்பர் ஸ்ரீதரன் இயக்க, ஒரு TVS எக்ஸல் வாகனம் நாங்கள் சென்ற



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.11 16:27:10 +0530

வாகனத்திற்கு இடபுறத்தில் இருந்து வலப்புறமாக வரவே எனது நண்பர் ஸ்ரீதரன் தனது வாகனத்தை கட்டுப்படுத்த இயலாமல் விபத்து ஏற்பட்டது.

2. மேற்சொன்ன TVS எக்ஸல் வாகனத்தை யார் ஓட்டினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் விபத்தில் மயக்க நிலையில் இருந்தேன். அதற்கு பின்னர் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. நான் கண்விழித்து பார்த்தபோது கிளினிக்கில் இருந்தேன். பிறகு மருத்துவ சிகிச்சைக்காக என்னை விநாயகா மிஷின் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். விபத்து எவ்வாறு நடைபெற்றது என்று அ.சா.1 ராகுல் காவல்களிடம் வாக்குமூலம் அளித்துள்ளார். விபத்து சம்பவத்தில் ஸ்ரீதரன் சிகிச்சை பலனில்லாமல் உயிர் இழந்தார். எனக்கும் எனது நண்பர் ராகுலுக்கும் காயம் ஏற்பட்டது. போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்." என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**10. (c). அ.சா.3 திரு. தங்கவேலு,** தனது முதல் விசாரணையில், "கடந்த 3 வருடங்களுக்கு முன்பாக மதியம் 03.00 மணியளவில் பாலம்பட்டியில் இருந்து கிருஷ்ணன்புதுார்க்கு இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டு இருந்தேன். அப்போது ஒரு இடத்தில் போக்குவரத்து நெரிசலில் நின்று கொண்டிருந்தபோது ஒரு சத்தம் கேட்டது. பின்னர் எனது அருகில் ஒரு Bajaj Bike கீழே சறுக்கி



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.11 16:27:15 +0530

விழுந்தது. நான் அந்த விபத்தை நேரடியாக பார்க்கவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்." என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**10. (d). அ.சா.4 திருமதி. புஷ்பா,** தனது முதல் விசாரணையில், "கடந்த 2 முதல் 3 வருடங்களுக்கு முன்பாக மதியம் 03.00 மணியளவில் பாலம்பட்டியில் இருந்து கிருஷ்ணன்புதுார்க்கு இருசக்கர வாகனத்தில் நானும், எனது கணவரும் சென்று கொண்டு இருந்தோம். அப்போது ஒரு இடத்தில் போக்குவரத்து நெரிசலில் நின்று கொண்டிருந்தபோது ஒரு சத்தம் கேட்டது. பின்னர் எனது அருகில் ஒரு Bajaj Bike கீழே சறுக்கி விழுந்தது. நான் அந்த விபத்தை நேரடியாக பார்க்கவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்." என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**10. (e). அ.சா.5 திரு. சண்முககுமார்,** தனது முதல் விசாரணையில், "1) நான் தற்போது சேலம் மாவட்ட மகுடஞ்சாவடி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிசெய்து வருகிறேன். மேற்படி காவல் நிலையத்தில் பணி புரிந்த காவல் ஆய்வாளர் திரு.தங்கவேல் பணியிடம் மாற்றம் பெற்று சென்றுவிட்டதால், அவர்களுடைய கையொப்பம் எனக்கு பரிட்சையம் என்பதாலும், வழக்கின் கோப்பின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2) கடந்த 25.06.2023 ம் தேதி இரவு 07.00 மணிக்கு, நிலைய அலுவலில் காவல் உதவி ஆய்வாளர் திரு.ரகு இருந்தபோது, சேலம்



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.11 16:27:21 +0530

சீரகாபாடி விம்ஸ் மருத்துவமனையில் இருந்து ஸ்ரீதரண் மற்றும் ராகுல் என்பவரின் சாலைவிபத்து காயதகவலின் பேரில் மேற்படி மருத்துவமனைக்கு சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.மணி என்பவரை அனுப்பி சிகிச்சையில் இருந்த அ.சா.1–ராகுல் என்பவரிடம் விசாரித்து வாக்குமூலம் பெற்றுவந்ததன் அடிப்படையில் வழக்கு பதிவு செய்ததில் குற்ற எண். 208/2023 ஆக சட்டபிரிவுகள் 279, 337 IPC ஆக வழக்கு பதிவு செய்துள்ளார். மேலும் முதல் தகவல் அறிக்கையை வாதியின் புகாருடன் இணைத்து, கனம் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண்.2, சங்ககிரி அவர்களுக்கு அனுப்பி வைத்தும், மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்து இவ்வழக்கு கோப்பை புலன் விசாரணை அதிகாரி பார்வைக்கு வைத்துள்ளார். **(மேற்சொன்ன புகார் வாக்குமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கை முறையே அ.சா.ஆ.1 மற்றும் 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3) பின்னர், இவ்வழக்கு கோப்பை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு 26.06.2023, காலை 08.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மதன், இளையராஜா ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து, அவர்களிடம் தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **(மேற்சொன்ன பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு**



SIVAKUMAR D

Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.11 16:27:27 +0530

**செய்யப்படுகிறது).** பின்னர், அன்றைய தினமே எதிரியை கைது செய்து நிலைய பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

4) பின்னர் சம்பவ இடத்தில் இருந்த கண்ணுற்ற சாட்சிகள் ராகுல், சீனிவாசன், தங்கவேல், புஷ்பா என்பவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் சிகிச்சை பலனளிக்காமல் இறந்த ஸ்ரீதரண் என்பவரின் பிரேதத்தை அன்றைய தினமே, சேலம் அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்து பிரேதத்தின்மீது பஞ்சாயத்தார் சாட்சிகள் குமார், சகாதேவன், செல்லதுரை, செந்தில்குமார், யுவராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பிரேதத்தை இறப்பின் மருத்துவர் ரீதியான காரணத்தை அறியும்பொருட்டு பிரேத பரிசோதனைக்காக வேண்டுகோள் மனுவை அனுப்பி வைத்துள்ளார்.

5) சாட்சிகளை விசாரணை செய்து முடித்த நிலையில் புலன் விசாரணை அதிகாரியிடம் காவல் உதவி ஆய்வாளர் திரு.ரகு கோப்பை ஒப்படைத்ததின் அடிப்படையில் புலன் விசாரணை அதிகாரியான காவல் ஆய்வாளர் வழக்கு கோப்பை விசாரணை எடுத்து கொண்டு, 30.06.2023 ம் தேதியன்று இறந்துபோன ஸ்ரீதரண் என்பவருக்கு பிரேத பரிசோதனை சான்று வழங்கிய சேலம் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.பழனிசாமி என்பவரை 30.06.2023 ம்



SIVAKUMAR D

Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.11 16:27:32 +0530

தேதியன்று விசாரித்து பிரேத பரிசோதனை சான்று பெற்று அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **(மேற்சொன்ன பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.5 ஆகவும், பிரேத பரிசோதனை சான்று அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).**

6) இவ்வழக்கில் காயம்பட்ட திரு.ராகுல் என்பவருக்கு சிகிச்சை அளித்த சேலம் விம்ஸ் மருத்துவமனை மருத்துவர் திரு.குரு சீனிவாசன் என்பவரை விசாரித்து காயச்சான்றினை பெற்றுள்ளார். மேற்படி சான்றில் ஏற்பட்ட காயம் கொடுங் காயம் என சான்று அளித்துளளார். இது தொடர்பாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **(மேற்சொன்ன காயச்சான்று அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

7) காயம்பட்ட ஸ்ரீதரண் என்பவர் இறந்துவிட்டதால் வழக்கின் சட்டப்பிரிவுகள் 279, 337 IPC லிருந்து 279, 337, 304(A) IPC ஆக மாற்றம் செய்து எதிரி மீது சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். **(மேற்சொன்ன சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** காயம்பட்ட ராகுல் என்பவருக்கு கொடுங்காயம் என்று சான்றழிக்கப்பட்டதால் 279, 337, 304(A) IPC லிருந்து 279, 338, 304(A) IPC ஆக மாற்றம் செய்து எதிரி மீது சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். **(மேற்சொன்ன சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.11 16:27:37 +0530

8) மேலும், இவ்வழக்கில் விபத்தை ஏற்படுத்திய மற்றும் விபத்துக்குள்ளான வாகனங்களான TN 90 E 5305 – TVS XL, TN 30 AE 4691 – Bajaj Plantina, TN 90 A 5079 – Splendor pro என்ற வாகனங்களை சங்ககிரி மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வுக்காக அனுப்பி வைத்துள்ளார்.

9) பின்னர், மூன்று வாகனங்கள் தொடர்பான மோட்டார் வாகன ஆய்வாளர், சங்ககிரி திருமதி.புஷ்பா என்பவரை விசாரித்து மோட்டார் வாகன ஆய்வறிக்கைகளை பெற்றும், அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **(மேற்சொன்ன மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வறிக்கைகள் முறையே அ.சா.ஆ.10, 11 மற்றும் 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

10) மேலும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த காவல் உதவி ஆய்வாளர் திரு. ரகு மற்றும் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.மணி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இத்துடன் புலன் விசாரணையை முடித்து எதிரி மீது கடந்த 13.04.2024 ம் தேதி, சட்டப்பிரிவுகள் 279, 338, 304(A) IPC–ன் கீழ் குற்ற இறுதி அறிக்கையை கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்." என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**11. கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், இவ்வழக்கின் எதிரிதான் சம்பவ சமயத்தில், TN 90 E 5305 என்ற TVS**



SIVAKUMAR D

Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.11 16:27:42 +0530

**XL மோட்டார் சைக்கிளை காகாபாளையம் – இளம்பிள்ளை ரோட்டில் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி சென்று, வழக்கில் இறந்துபோன ஸ்ரீதரன் என்பவர் ஓட்டிச்சென்ற TN 30 AE 4691 என்ற Bajaj Platina மீது மோதி விபத்தை ஏற்படுத்தி, அதனால் ஸ்ரீதரனுக்கு பலத்த காயம் ஏற்பட்டு சிகிச்சை பலனின்றி உயிர் இழந்தார் என்ற விவரத்தையும், மேலும், அச்சமயத்தில் TN 90 A 5079 என்ற Hero Splendor Pro மோட்டார் சைக்கிளின் மீது ஸ்ரீதரன் ஓட்டிச்சென்ன மோட்டார் சைக்கிள் மோதி விபத்தை ஏற்படுத்திய விவரத்தையும், மேலும், மேற்சொன்ன சம்பவத்தில் அ.சா.1–க்கு கொடுங்காயம் ஏற்பட்டது என்று அரசுதரப்பு சாட்சிகள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கும் வகையில் சாட்சியம் அளிக்கவில்லை என்று வாதிட்டார்.**

<u>மேற்படி எதிரியின் தரப்பு வாதத்தை இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு ஆய்வு செய்து, தீர்மானிக்கிறது:</u>

**<u>விவாதம், தீர்வு மற்றும் தீர்வுக்கான காரணம்:</u>**

**11. (a).** அ.சா.1, இவ்வழக்கின் புகார்தாரர் என்ற நிலையில், அவர் தனது முதல் விசாரணையில், எதிரியை தனக்கு தெரியாது என்றும், கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பாக இளம்பிள்ளை பஸ் ஸ்டாண்ட் அருகே தனது இரு நண்பர்களான அ.சா.2 மற்றும் இறந்துபோன திரு.ஸ்ரீதரன் ஆகிய மூவரும் இருசக்கர வாகனத்தில் சென்றதாகவும், அப்போது, ஒரு TVS எக்ஸல் வாகனம் தாங்கள் சென்ற இடது பக்கமாகவே எதிரே



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.11 16:27:48 +0530

வந்து வலது பக்கமாக திரும்பவே, தாங்கள் சென்ற இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த திரு. ஸ்ரீதரன் எதிரே வந்த TVS எக்ஸல் வாகனத்தின் மேல் இடிக்க கூடாது என்று கருதி தாங்கள் சென்ற இருசக்கர வாகனத்தை வலது பக்கமாக திருப்பவே, விபத்து ஏற்பட்டது என்றும், மேற்சொன்ன TVS எக்ஸல் வாகனத்தை யார் ஓட்டினார்கள் என்று தனக்கு தெரியாது என்றும், சம்பவத்தில் ஸ்ரீதரன் உயிரிழந்ததாகவும், சம்வத்தில் காயம் ஏற்பட்டு சிகிச்சையில் இருந்த தன்னிடம் போலிசார் புகார் வாக்குமூலம் பெற்று, வழக்கு சம்மந்தமாக தன்னை விசாரித்தாக சாட்சியம் அளித்துள்ளார்.

**11. (b).** அ.சா.2 தனது முதல் விசாரணையில், எதிரியை தனக்கு தெரியாது என்றும் 25.06.2023 அன்று இளம்பிள்ளை பஸ்ஸ்டான் அருகே தானும் அ.சா.1 மற்றும் இறந்துபோன திரு. ஸ்ரீதரன் ஆகிய மூவரும் இரு சக்கர வாகனத்தில் செல்ல, அந்த இருசக்கர வாகனத்தை திரு.ஸ்ரீதரன் ஓட்டினார், அப்போது, ஒரு TVS XL வாகனம் தாங்கள் சென்ற வாகனத்திற்கு இடது புறத்தில் இருந்து வலப்புறம் வரவே, திரு.ஸ்ரீதரன் தாங்கள் சென்ற வாகனத்தை கட்டுபடுத்த இயலாமல் விபத்து ஏற்பட்டது என்றும், மேற்சொன்ன TVS XL வாகனத்தை யார் ஓட்டினார் என்று தனக்கு தெரியாது என்றும், விபத்தில் தான் மயக்கம் அடைந்ததாகவும், தனக்கு ஏற்பட்ட காயத்திற்கு விநாயகா மிஷன் மருத்துவமனையில் சிகிச்சை



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.11 16:27:54 +0530

பெற்றதாகவும், திரு.ஸ்ரீதரன் விபத்து சம்பவத்தில் சிகிச்சை பலன் இல்லாமல் இறந்ததாகவும், அ.சா.1—க்கும் விபத்து சமயத்தில் காயம் ஏற்பட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

**11.(c).** அ.சா.3 மற்றும் அ.சா.4 ஆகிய சாட்சிகள், இவ்வழக்கு குற்ற சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள் என்று அரசுத்தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் மேற்சொன்ன சாட்சிகள், தங்களது முதல் விசாரணையில், கடந்த 3 வருடங்களுக்கு முன்பாக மதியம் 3.00 மணியளவில் பாலம்பட்டியில் இருந்து கிருஷ்ணன்புதூர்க்கு இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்ததாகவும், அப்போது, ஒரு இடத்தில் போக்குவரத்து நெரிசலில் தாங்கள் நின்று கொண்டிருந்தபோது ஒரு சத்தம் கேட்டது என்றும், பின்னர் தங்களது அருகில் ஒரு Bajaj Bike கீழே சறுக்கி விழுந்ததது என்றும், அந்த விபத்தை தாங்கள் நேரடியாக பார்க்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளனர்.

**11.(d).** அ.சா.1 தனது சாட்சியத்தில், இவ்வழக்கின் எதிரி தான் சம்பவ சமயத்தில் TVS XL வாகனத்தினை ஓட்டினார் என்று குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. அ.சா.2 முதல் அ.சா.4 வரையிலான அரசுத்தரப்பு சாட்சிகள் தங்களது சாட்சியத்தில், இவ்வழக்கின் எதிரி தான் சம்பவ சமயத்தில் TVS XL வாகனத்தினை ஓட்டினார் என்று குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. அ.சா.1 தனது முதல் விசாரணையில் TVS XL வாகனத்தை யார் ஓட்டினார்கள் என்று



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.11 16:27:59 +0530

தனக்கு தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ள நிலையில், அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில் இறந்துபோன திரு.ஸ்ரீதரன் தாங்கள் சென்ற இருசக்கர வாகனத்தை அவசரமாக வலது பக்கம் திருப்பவில்லை என்றால் விபத்து நடந்திருக்க வாய்ப்பு இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**11.(e).** அ.சா.2, தனது குறுக்கு விசாரணையில், இறந்துபோன திரு.ஸ்ரீதரன் தாங்கள் சென்ற இருசக்கர வாகனத்தை அவசரமாக வலது பக்கம் திருப்பவில்லை என்றால் விபத்து நடந்திருக்காது என்று சாட்சியம் அளித்துள்ள நிலையில், அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான அரசுத்தரப்பு சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் எதிரி சம்பவ சமயத்தில் அஜாக்கிரதையாகவோ, அதிவேகமாகவோ, பொறுப்பற்ற தன்மையுடனோ, மேற்சொன்ன TVS XL வாகனத்தை ஓட்டினார் என்று சாட்சியம் அளிக்கவில்லை. மேலும், அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகிய இரு சாட்சிகளும் தங்களது குறுக்கு விசாரணையில், TVS XL குறுக்கு சாலையில் இருந்த வந்ததற்கு பின்னர், TN 90 A 5079 என்ற Hero Splender pro மோட்டார் சைக்கிள் வரவில்லை என்றும், தாங்கள் சென்ற இருசக்கர வாகனம் எந்த வாகனத்துடன் மோதியது என்று தங்களுக்கு தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ள நிலையில், தாங்கள் சென்ற வாகனம் விபத்துக்குப்பின்னர், TN 90 A 5079 என்ற Hero Splender pro மோட்டார் சைக்கிளின் மீது மோதியதாக அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் சாட்சியம் அளிக்காத நிலையில்,



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.11 16:28:04 +0530

இவ்வழக்கின் புகார் வாக்குமூலமான அ.சா.ஆ.1–ல் குறிப்பிட்டுள்ள விவரங்களுடன் அ.சா.1 ன் சாட்சியமும் அ.சா.2 முதல் அ.சா4. வரையிலான சாட்சிகளின் சாட்சியமும் பொருந்தவில்லை (Not Corroborated).

**11.(f).** அ.சா.1 மற்றும் அ.சா 2 ஆகிய இரு சாட்சிகளும் தங்களது சாட்சியத்தில், சம்பவ சமயத்தில் தாங்கள் மேற்சொன்ன இரு சக்கர வாகனத்தில் மூன்று நபர்கள் பயணம் செய்ததாக சாட்சியம் அளித்துள்ள நிலையில், இரு சக்கர வாகனத்தில் இரு நபர்கள் மட்டுமே பயணிக்க மோட்டார் வாகன சட்டம் அனுமதி அளித்துள்ள நிலையில், மூன்று நபர்கள் மேற்சொன்ன இருசக்கர வாகனத்தில் பயணித்தது மோட்டார் வாகன சட்டத்திற்கு எதிரானது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**11. (g).** அ.சா.ஆ.7 – அ.சா.1–ன் காயச்சான்றின் இந்நீதிமன்றம் ஆய்வு செய்ததில் அ.சா.1–க்கு சம்பவ சமயத்தில் அவரின் வலது கண் புருவத்தின் அருகே காயமும், விரல்களில் காயமும், இடது கால் பாதத்தில் வீக்கமும், நெற்றியில் சிராய்ப்பு காயமும் ஏற்பட்டுள்ள விவரம் இந்நீதிமன்றத்திற்கு தெரிய வந்துள்ள நிலையில், மேற்சொன்ன காயங்கள் 1 மற்றும் 4 வது காயம் கொடுங்காயம் என்ற விவரமும் இந்நீதிமன்றத்திற்கு தெரியவந்துள்ள நிலையில், இவ்வழக்கில் முக்கிய சாட்சிகளான அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் இவ்வழக்கின் எதிரி தான் வழக்கு குற்ற



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.11 16:28:10 +0530

சம்பவத்தில் ஈடுபட்டார் என்ற விவரத்தை தங்களது சாட்சியத்தில் குறிப்பிட்டு கூறாத நிலையில், இவ்வழக்கின் எதிரி சம்பவ சமயத்தில் எவ்வாறு அஜாரக்கிரதையாகவோ, அதிவேகமாகவோ, கவனக்குறைவாகவோ தனது வாகனத்தை ஓட்டிச் சென்று, மேற்சொன்ன விபத்தை ஏற்படுத்தினார் என்ற விவரத்தை மேற்சொன்ன சாட்சிகள் சாட்சியம் அளிக்கவில்லை.

**11. (h).** இவ்வழக்கில் தயாரிக்கப்பட்ட பார்வை மகஜரான அ.சா.ஆ.3 மற்றும் மாதிரி வரைபடமான அ.சா.ஆ.4–ல், மேற்படி வாகனங்களின் சக்கர அச்சுக்கள் (Tyre Skid Marks / Tyre Marks) சம்பவ இடத்தில் பதிந்துள்ளதாகவோ, இவ்வழக்கில், தாக்கல் செய்யப்பட்டுள்ள பார்வை மகஜர் மற்றும் வரைபடத்தில் மேற்சொன்ன வாகனங்களின் சக்கர அச்சுக்கள் (Tyre Skid Marks / Tyre Marks) சம்பவயிடத்தில் குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவோ, இவ்வழக்கின் எதிரி, எவ்வளவு கிலோ மீட்டர் வேகத்தில் அதிவேகமாக சம்பவ சமயத்தில் மேற்சொன்ன வானத்தை ஓட்டி வந்தார் என்ற விபரத்தை பற்றியோ, அரசுதரப்பு சாட்சிகள், தங்களின் சாட்சியத்தில் குறிப்பிடவில்லை. இவ்வழக்கில், விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் சக்கர அச்சுக்கள் (Tyre Skid Marks / Tyre Marks) சம்பவயிடத்தில், பதிவு செய்யப்பட்டிருந்தால், அதனை கொண்டு மேற்படி வாகனத்தை எதிரி அதிவேகமாக ஓட்டினார் என்று இந்நீதிமன்றம் முடிவுக்கு வர இயலும். ஆனால், இவ்வழக்கில்,



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.11 16:28:16 +0530

சம்பவயிடத்தில், மேற்சொன்ன சக்கர அச்சுக்கள் (Tyre Skid Marks / Tyre Marks) அரசுத்தரப்பால் வழக்கு ஆவணங்களில் குறியீடு செய்யப்படவில்லை.

**11.(i).** அரசுத்தரப்பு சாட்சிகள், இவ்வழக்கின் எதிரி ஓட்டி வந்த வாகனம், சம்பவ சமயத்தில், எத்தனை கிலோ மீட்டர் வேகத்தில் வந்தது என்றோ, சம்பவயிடத்தில், எவ்வளவு வேகத்தில் வாகனங்களை இயக்க அனுமதிக்கப்பட்டுள்ளது என்ற போக்குவரத்து விதியை பற்றி தங்களது சாட்சியத்தில் கூறவில்லை. மேலும், ஒருவர் தனது வாகனத்தை, வேகமாக இயக்கினார் என்பதை மட்டும் கொண்டு, மேற்சொன்ன நபர் அதிவேகமாக மற்றும் அஜாக்கிரதையாக தனது வாகனத்தை இயக்குகிறார் என்று இந்நீதிமன்றம் கருத இயலாது.

**11. (j).** ஏனெனில், வாகனம் என்பது ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு விரைவாக செல்லத்தான் பயன்படுத்தப்படுகிறது என்ற நிலையில், சம்பவயிடத்தில், போக்குவரத்து விதிகளின் படி, எவ்வளவு கிலோ மீட்டர் வேகத்தில் செல்லவேண்டும் என்று அரசுத்தரப்பு சாட்சிகள் சாட்சியம் அளிக்காத நிலையில், இவ்வழக்கின் எதிரி, சம்பவயிடத்தில் எவ்வளவு கிலோ மீட்டர் வேகத்தில் சென்றார் என்ற விபரத்தை அரசுத்தரப்பு சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் சாட்சியம் அளிக்காத நிலையில், இவ்வழக்கின் எதிரி, அதிவேகமாக தனது



SIVAKUMAR D

Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.11 16:28:21 +0530

வாகனத்தை இயக்கினார் என்று அரசுத்தரப்பு சாட்சிகள் ஊர்ஜீதப்படுத்தும் வகையில் சாட்சியம் அளிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், இவ்வழக்கின் எதிரி சம்பவ சமயத்தில் எவ்வாறு பொறுப்பற்ற தன்மையுடன் தனது வாகனத்தை இயக்கி அதனால் மேற்சொன்ன விபத்து ஏற்பட்டது என்ற விவரத்தை அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் கூறவில்லை.

**11. (k).** இவ்வழக்கில், ஸ்ரீதரன் விபத்து சம்பவத்தினால் காயம் ஏற்பட்டு அதன் காரணமாகத்தான் இறந்துள்ளார் என அ.சா.ஆ.05 – பிரேத விசாரணை அறிக்கை, அ.சா.ஆ.06 – பிரேத பரிசோதனை சான்று வாயிலாகவும் மற்றும் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோரின் சாட்சியத்தின் வாயிலாகவும் இந்நீதிமன்றம் அறியப்பெற்றாலும், மேற்சொன்ன எதிரி தனது வாகனத்தை அஜாக்கிரதையாகவோ, அதிவேகமாகவோ, கவனக்குறைவாகவோ இயக்கிய காரணத்தினால் தான், மேற்சொன்ன விபத்து ஏற்பட்டு, ஸ்ரீதரன் என்பவருக்கு காயம் ஏற்பட்டு அதனால், அவர் இறந்தார் என்றோ, மேலும், அ.சா.1–க்கு கொடுங்காயம் ஏற்பட்டது என்றோ, ஊர்ஜீதப்படுத்தும் வகையில் அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியம் அமையப்பெறவில்லை.

**11. (l).** இ.த.ச பிரிவு 304(A)–ன் படி எதிரியை குற்றவாளி என கருத வேண்டுமானால், மேற்சொன்ன எதிரி தன் வாகனத்தை



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.11 16:28:27 +0530

அஜாக்கிரதையாகவோ, அதிவேகமாகவோ, பொறுப்பற்ற தன்மையுடன் கவனக்குறைவாக ஓட்டினார் என்றோ, அதனால்தான் விபத்து ஏற்பட்டு உயிரிழப்பு ஏற்பட்டது என்பதை அரசுத்தரப்பு நிரூபிக்க வேண்டும். ஆனால், இவ்வழக்கில், அரசுத்தரப்பு, எதிரி எவ்வாறு அஜாக்கிரதையாக செயல்பட்டார் என்றோ அல்லது எவ்வளவு கிலோமீட்டர் வேகத்தில் அதிவேகமாக சென்று, மேற்சொன்ன விபத்தை ஏற்படுத்தினார் என்றோ அல்லது எதிரி எவ்வாறு பொறுப்பற்ற தன்மையுடன் செயல்பட்டு, அதனால் மேற்படி விபத்து ஏற்பட்டு, மேற்சொன்ன ஸ்ரீதரன் என்பவர் உயிர் இழந்தார் என்பதை பற்றியோ, அரசுத்தரப்பு சாட்சிகள் சரிவரவும், சந்தேகத்திற்கிடமின்றியும் நிரூபிக்கவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், இவ்வழக்கு விபத்து சம்பவத்தை எதிரி தான் ஏற்படுத்தினார் என்ற விவரத்தை அ.சா.01 முதல் அ.சா.04 வரையிலான சாட்சிகள் ஊர்ஜிதப்படுத்தும் வகையில் சாட்சியம் அளிக்கவில்லை.

**11. (m).** இவ்வழக்கினை புலன் விசாரணை செய்து, இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்து அ.சா.05, அளித்த சாட்சியத்தை மட்டும் வைத்து, எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டதாக முடிவு செய்வது, நீதியின் நலனுக்கு உகந்தது அல்ல என்ற காரணத்தினால், இவ்வழக்கை அரசுத்தரப்பு



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.11 16:28:32 +0530

சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**11. (n).** மாண்புமிகு. டெல்லி உயர்நீதிமன்றம், Kishore Chand Joshi –Vs– The State என்ற வழக்கில் கடந்த 12.11.2018–ல் பிறப்பிக்கப்பட்ட முன் தீர்ப்பில்,

"**In Para No. 17.** A witness can depose as to the manner of driving or speed at which the vehicle was being driven but not render an opinion on "rash and negligent". High speed by itself may not in each case be sufficient to hold that a driver is rash or negligent. Speed alone is not the criterion for deciding the rashness or negligence on the part of the driver.

**In Para No. 18.** In the present case, PW-1 in his testimony has not stated anything as to how the vehicle was being driven. There is no mention as to whether the vehicle was being driven at a high speed or in a manner which may be construed as "rash and negligent" by the Court. PW-2 also has given his perception that the vehicle was being driven in a rash and negligent manner. No skid marks or tyre marks have been obtained of the spot to indicate that the vehicle was being driven at a high speed.

**In Para No. 21.** Reference may be had to the judgment of a Coordinate Bench Ram Chander vs. State : 2017[4] JCC 2676 of this Court in Abdul Subhan vs. State (NCT of Delhi): 133 (2006) DLT 562, wherein, this Court has held that to be punished under Section 304A IPC, a point to be established is that the act of the accused was responsible for the death and such act must have been rash and



SIVAKUMAR D

Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.11 16:28:37 +0530

negligent and the prosecution has to prove the commission of rash and negligent act. The court relied upon the decision of the Orrisa High Court in Badri Prasad Tiwari Vs. The State: 1994 Cri L J 389, wherein the Court had held that a bald statement of a witness that the vehicle was being driven at a high speed does not ipso facto establish rash and negligence conduct.

**In Para No. 22.** Keeping in view the facts and circumstances of the case and on perusal of the records, I am of the view that the prosecution has filed to prove beyond reasonable doubt that the conduct of the petitioner was rash and negligent and the petitioner is guilty of having committed offence under Section 304 A/279 IPC by causing death of the victim. Learned counsel for the petitioner has been able to show that there is reasonable doubt as to whether the accident was caused on account of the act of the petitioner and said act was rash and negligent. Accordingly, I am of the view that the judgments of the Trial Court as well as the Appellate Court suffers from Infirmities." **என்று தீர்ப்பு அளித்துள்ளது. மேற்படி முன்தீர்ப்பு இவ்வழக்கின் சங்கதிகளுக்கு பொருந்தும் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.**

**11. (ம). எனவே, இவ்வழக்கின் எதிரிதான் சம்பவ சமயத்தில், TN 90 E 5305 என்ற TVS XL மோட்டார் சைக்கிளை காகாபாளையம் – இளம்பிள்ளை ரோட்டில் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி சென்று, வழக்கில் இறந்துபோன ஸ்ரீதரன் என்பவர் ஓட்டிச்சென்ற TN 30 AE 4691 என்ற Bajaj Platina மீது மோதி விபத்தை ஏற்படுத்தி, அதனால் ஸ்ரீதரனுக்கு பலத்த காயம் ஏற்பட்டு**



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.11 16:28:43 +0530

சிகிச்சை பலனின்றி உயிர் இழந்தார் என்ற விவரத்தையும், மேலும், அச்சமயத்தில் TN 90 A 5079 என்ற Hero Splendor Pro மோட்டார் சைக்கிளின் மீது ஸ்ரீதரன் ஓட்டிச்சென்ன மோட்டார் சைக்கிள் மோதி விபத்தை ஏற்படுத்திய விவரத்தையும், மேலும், மேற்சொன்ன சம்பவத்தில் அ.சா.1–க்கு கொடுங்காயம் ஏற்பட்டது என்று அரசுதரப்பு சாட்சிகள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கும் வகையில் சாட்சியம் அளிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**12.** முடிவாக, மேலே ஆராய்ந்த காரணங்களின் அடிப்படையில் தீர்மானித்த படி, எதிரி மீது வனையப்பட்டுள்ள இ.த.ச பிரிவுகள் 279, 338, 304(A)–ன் கீழான குற்றசாட்டுகளை அரசுதரப்பு சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்காத காரணத்தினால், மேற்சொன்ன எதிரி மீது வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளான இ.த.ச பிரிவுகள் 279, 338, 304(A)–ன் கீழ் அவர் குற்றவாளி அல்ல என்று முடிவு செய்தும், எதிரியை 271(1) of B.N.S.S-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**13.** இவ்வழக்கில், வழக்கு சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**14.** இந்த வழக்கு விசாரணை நிலுவையில் இருந்தபோது, எதிரி பிணையில் சென்றுள்ளார். இவ்வழக்கின் மேல் முறையீட்டு



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.11 16:28:48 +0530

காலத்திற்கு பின் குற்றம் சாட்டப்பட்ட நபர் எழுதிக்கொடுத்த பிணைப்பத்திரங்கள் ரத்தாக இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11ம் நாள் செவ்வாய்க்கிழமை இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SIVAKUMAR D

Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.11 16:28:55 +0530

**நீதித்துறை நடுவர் எண்.2,**
**சங்ககிரி.**

**பின் இணைப்பு**
**அரசு தரப்பு சாட்சிகள்:**

| அரசுதரப்பு சாட்சிகளின் வரிசை எண் | அரசுதரப்பு சாட்சிகளின் பெயர் |
|---|---|
| அ.சா.1 | திரு.ராகுல் |
| அ.சா.2 | திரு. சீனிவாசன் |
| அ.சா.3 | திரு. தங்கவேல் |
| அ.சா.4 | திருமதி. புஷ்பா |
| அ.சா.5 | திரு. சண்முககுமார், சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் |

**<u>அரசுத்தரப்பு சான்றாவணங்கள்</u>:**

| அரசுத்தரப்பு சான்றாவணங்–களின் வரிசை | தேதி | அரசுத்தரப்பு சான்றாவணங்கள் |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 25.06.2023 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.2 | 25.06.2023 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.3 | 26.06.2023 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.4 | 26.06.2023 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.5 | 30.06.2023 | பிரேத விசாரணை அறிக்கை |
| அ.சா.ஆ.6 | 30.06.2023 | பிரேத பரிசோதனை சான்று |
| அ.சா.ஆ.7 | 30.03.2024 | காயச்சான்று |
| அ.சா.ஆ.8 | 30.06.2023 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |
| அ.சா.ஆ.9 | 13.04.2024 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |
| அ.சா.ஆ.10 | 26.07.2023 | மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வறிக்கை (TN 90 E 5305) |
| அ.சா.ஆ.11 | 08.04.2024 | மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வறிக்கை (TN 30 AE 4691) |
| அ.சா.ஆ.12 | 13.07.2023 | மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வறிக்கை (TN 90 A 5079) |

**<u>அரசுத்தரப்பு சான்றுப்பொருள்கள்:</u>**
–இல்லை–

**<u>எதிரிதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :</u>**
–இல்லை–

**<u>பிற்சேர்க்கை</u>**

1. வழக்கு விசாரணை காலத்தில எதிரி பிணையில் இருந்தார்.



SIVAKUMAR D

Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.11 16:29:01 +0530

2 வழக்கு விசாரணை காலத்தில் எந்த ஒரு சாட்சியும் மூன்று நாட்களுக்கு மேல் விசாரணையின்றி நிறுத்தி வைக்கப்படவில்லை.

3. வழக்கின் முடிவு அரசுதரப்புக்கு தெரிவிக்கப்பட்டது.

4. வழக்குச் சொத்து தாக்கல் செய்யப்படவில்லை.

5. முடிவில், எதிரிக்கு, சட்டப்பிரிவு 271(1) B.N.S.S.–ன் படி விடுதலை வழங்கி இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டது.

SIVAKUMAR D

Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.08.11 16:29:08 +0530

**நீதித்துறை நடுவர் எண்.2,**
**சங்ககிரி.**

Judgment uploaded online on 11.08.2026.